DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE)

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| Name | தர்மராஜ் | Village | வாணியம்பாடி |
|---|---|---|---|
| Father's Name | கலியபெருமாள் | Taluk | வாணியம்பாடி |
| Age | 59 | Calling | வியாபாரம் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **11.06.2026**

**O.S. No. 55/2023** **வா.சா.2** **12.49 PM – 01.03 PM**

**குறுக்கு விசாரணை –**

1. வாதி அழைத்ததன் பேரில் நான் சாட்சிமளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கின் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்ததாக கூறப்படும் வழக்கு விவரம் எனக்கு தெரியுமா என்றால் தற்போது நினைவில்லை. இந்த வழக்கானது எப்போது வாய்தாவிற்கு வருகிறது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கின் வாதி நியமத்திற்கும் வழக்கறிஞரை தான் நானும் என் வழக்கிற்கு நியமித்துள்ளேன் என்றால் ஆமாம்.

2. வாதி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கின் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் உடன் பிறந்த தம்பி ஆவார். நானும் வாதியும் ஒரே குடும்பமாக வசித்து வருகிறோமா என்றால் இல்லை தனித்தனி குடும்பமாக வசித்து வருகிறோம். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் வாதி கூறியதன் பேரில் தயார் செய்யப்பட்டதா என்றால் ஆமாம். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் எனது தம்பியான வாதி மூலம் தான் தெரியும் என்றால் ஆமாம்.

3. வாதி செலுத்தி வருவதாக கூறப்படும் வாடகைக்கும் முன்பணம் செலுத்திய விவரம் குறித்து ரசீதுகள் ஏதேனும் உள்ளதா என்றால் ஆம் இருக்கிறது. வாதிக்கு வாடகை விடப்பட்டதற்கு குறித்து ஆதாரம் உள்ளதா என்றால் உள்ளது. வாதிக்கு கட்டடம் சேர்த்து தான் வாடகைக்கு விடப்பட்டது என்று சொன்னால் சரியல்ல காலியிடமாகத்தான் விடப்பட்டது. காலியிடமாகத்தான் வாடகைக்கு விடப்பட்டது என்பதை காட்டுவதற்கு ஆதாரமாக யார் எழுதிக்

கொடுத்தது என்று சொன்னால் ஆறுமுக செட்டியார் வாதி மூர்த்திக்கு எழுதி கொடுத்துள்ளார். நான் கூறுவது போன்று எழுதிக் கொடுத்ததாக கூறப்படும் தேதி மாதம் தெரியுமா என்றால் நினைவல்லை.

4. வழக்கு சொத்து குறித்து வாடகை பாக்கி ஏதேனும் உள்ளதா என்றால் இன்றைய தேதி வரையில் எந்த ஒரு வாடகை பாக்கியும் இல்லை. சென்ற மாதத்திற்கு வாடகை தொகையை மூர்த்தி எவ்வாறு செலுத்தினார் என்று சொன்னால் பிரதிவாதி செந்தில்குமார் அவரின் ஐசிஐசிஐ வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தினார் அதற்கான ரசீது உள்ளது. அந்த ரசீதை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன்.

5. வாடகை விடப்பட்ட இடத்தை இதுவரையும் அளந்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி காலி செய்து கொடுக்குமாறு எங்களை கேட்டாரா என்றால் ஆமாம் கேட்டார். கட்டிடங்கள் அனைத்தும் பழுதடைந்து விட்டது அதனால் அதை இடித்து கட்ட காலி செய்யுமாறு கேட்டதற்கு வாதி என்ன கூறினார் என்றால் கட்டடங்கள் நாங்கள் தான் கட்டினோம் வலுவாகத்தான் உள்ளது காலி செய்ய நேரம் கொடுக்குமாறு கேட்டார். பிரதிவாதியிடம் வழக்கு சொத்து குறித்து தற்போது வாடகை ஒப்பந்தம் ஏதேனும் போடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

6. வாதி வாடகை சரியாக செலுத்தவில்லை என்றாலும் கட்டிடம் பழுதடைந்த நிலை அடைந்து விட்டது அதனால் காலி செய்யக்கோரி வாதிக்கு எதிராக தனியாக ஒரு வாடகை கட்டுப்பாட்டு மனு தாக்கல் செய்துள்ளாரா என்றால் ஆமாம், என் மீதும் அது போல ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி சட்டப்படியான நடவடிக்கை எடுப்பார் என்று தெரிந்து கொண்டு தவறாக ஒரு வழக்கை பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்து அதற்கு நான் தவறாக சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி ஒருபோதும் சட்டத்திற்கு புறம்பாக வழக்கு சொத்தை காலி செய்ய முயற்சி மேற்கொண்டதில்லை என்று சொன்னாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

***குறுக்கு விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.***

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வாணியம்பாடி.